**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கள்ளக்குறிச்சி**

முன்னிலை : **திருமதி.த.பானுமதி. B.A., L.L.B,**
முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 (FAC)
கள்ளக்குறிச்சி.

2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 05–ம் நாள் வெள்ளிக்கிழமை

**Crl.M.P. No. 863/2026**

திரு.ராயர்,
த/பெ.பொன்முடி ...மனுதாரர்

//எதிர்//

காவல் நிலைய பொறுப்பு அதிகாரி,

சைபர் கிரைம் காவல் நிலையம்,

குற்ற எண்.10/2026

U/s.318(4) BNS, 66D IT (Amendment) Act ...எதிர்மனுதாரர்

* * * * *

இம்மனுவானது 26.05.2026 அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.ஆனந்தன் அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**உத்தரவு**

இம்மனுவானது பிரிவு 497 & 503 of BNSS–ன் கீழ் மனுவில் குறிப்பிட்டுள்ள HR-51-AY-4624 என்ற பதிவெண் கொண்ட Innova Car நான்கு சக்கர வாகனத்தை மனுதாரரிடம் இடைக்கால பொறுப்பில் பாதுகாப்புக்காக ஒப்படைக்கவும் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. வழக்கு ஆவணங்கள் மற்றும் போலீசாரின் பதிலை பரிசீலனை செய்யும்போது HR-51-AY-4624 என்ற பதிவெண் கொண்ட Innova Car நான்கு சக்கர வாகனம் இந்த வழக்கில் போலிசாரால் கைப்பற்றப்பட்டு அது நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு சி.பி.எண்.75/2026 ஆக உள்ளது என்றும் தெரியவருகிறது. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனுதாரர்தான் மேற்படி வாகனத்தின் உரிமையாளர் என்று தெரிவித்து, எதிர்மனுதாரர் வெளிமாநிலங்களிலிருந்து வாகனத்தை வாங்கி விற்கும் பணி செய்து வந்து, அவரிடம் மனுவில் கண்டுள்ள வாகனத்தை வாங்கிய உடன் வாகன பதிவு ஆவணத்தை மனுதாரர் பெயரில் மாற்றம் செய்வதற்கு முன்பே இவ்வழக்கு குற்றவாளியை எதிர்மனுதாரர் கைது செய்துவிட்டதாகவும், ஆவணத்தின் உரிமை மாற்று ஆவணங்கள் குற்றவாளியிடமே உள்ளதாகவும், மனுதாரர் மனுவில் கண்ட வாகனத்தை வாடகைக்கு விடதான் வாங்கியதாகவும், அதை வைத்துதான் சம்பாதித்து வந்ததாகவும், வாகனத்தை மேற்கண்ட வழக்கில் எதிர்மனுதாரர் கைப்பற்றிவிட்டதாகவும், மனுவில் கண்ட வழக்கு சொத்து இல்லாமல் மனுதாரர் அன்றாட தேவைகளுக்கே கஷ்டபட்டு வருவதாகவும், எனவே மனுவில் கண்ட வழக்கு சொத்தை இடைக்கால ஒப்படைப்பில் வழங்கும்படி வாதிட்டப்பட்டது. மேற்படி வாகனத்தின் உரிமை ஆவணத்தின் நகலையும், மனுதாரரின் ஆதார் அட்டை நகலையும் தாக்கல் செய்துள்ளார். நீதிமன்றம் விதிக்கும் கட்டளைகளை மனுதாரர்

பின்பற்றுவார் என்றும், மனு அனுமதிக்கப்படவில்லை என்றால் மனுதாரருக்கு மிகுந்த கஸ்டமும், நஸ்டமும் உண்டாகும் என்றும் வாதிட்டார். எதிர்மனுதாரர் தரப்பில் நீதிமன்றம் வாகனத்தை மனுதாரரிடம் ஒப்படைப்பதற்கு உத்தரவு பிறப்பித்தால் ஒப்படைக்க எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2. வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்து பார்க்கையில் மனுதாரர் இந்த வழக்கில் எதிரி இல்லை என்பதை அறியமுடிகிறது. மனுதாரர் தரப்பு ஆவணங்களிலிருந்து மனுவில் குறிப்பிட்டுள்ள வாகனமானது மனுதாரர் பெயரில் இல்லை என்பதையும் அது ரீனுகார்க் என்பவரது பெயரில் ஹரியானா மாநிலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதையும் அறியமுடிகிறது. மனுதாரர் தரப்பில் மேற்படி ரீனுகார்கிடமிருந்து வாகனத்தை மனுதாரருக்கு விற்பனை செய்துவிட்டதாக உரிமைமாற்று படிவம் தாக்கல் செய்யவில்லை என்பது அறியமுடிகிறது. மேலும் மேற்படி வாகன பதிவு எண் அட்டையில் உள்ள ரீனுகார்க் இம்மனுவில் ஒரு தரப்பினராக இல்லை என்பதும் அறியமுடிகிறது. எனவே மனுதாரர் இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் இல்லை என்றாலும் அவரது பெயரில் நேரிடியாக வழக்கு சொத்து பொறுத்து எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யாமல் மனுதாரர்தான் இம்மனுவில் உள்ள சொத்தின் உரிமையாளர் என்பதை உறுதி செய்யமுடியாது என்பதால் மனுதாரர்தான் மனுவில் குறிப்பிட்டுள்ள வாகனத்தின் உரிமையாளர் என முதற்தோற்றமாக நிரூபணம் செய்ய தவறியுள்ளதால் அவரிடம் வாகனத்தை இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்க இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே இந்த மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த ஆணை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கனிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 05–ம் நாள் வெள்ளிக்கிழமையாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

BANUMATHI

Digitally signed by BANUMATHI
Date: 2026.06.05 18:26:45 +0530

நீதித்துறை நடுவர் எண்.1, (FAC)
கள்ளக்குறிச்சி.